# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு

## 2011/2012 (2017 – December)

## EDS - 4223 கலைத்திட்டக் கோட்பாடுகளும் பிரயோகமும்

## (Curriculum Theories and Practices)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

---

1.

i. பல்வேறு கல்வியியலாளர்கள் கலைத்திட்டம் பற்றிக் கூறிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கலைத்திட்டம் பற்றிய உமது விளக்கத்தை முன்வைக்குக..

(10 புள்ளிகள் )

ii. "பாடசாலைக் கலைத்திட்டமானது நிலைக்குத்து இணைப்பு, குறுக்குமுக இணைப்பு ஆகிய இருவழி இணைப்புக்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது" இக்கூற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

iii. "உருவாக்கப்படும் கலைத்திட்டமானது பல்வேறு வினாக்களுக்கு விடையளிக்கக் கூடியவாறு அமைக்கப்படல் வேண்டும்". அவ்வாறான விளக்கங்கள் ஐந்தினை பட்டியலிடுக.

(5 x 1 = 5 புள்ளிகள்)

2.

i. "கலைத்திட்டத்தின் ஒரு கூறாகிய பாடத்திட்டமானது வேலைத்திட்டமாக மாற்றப்படுவதன் மூலமே பாடசாலையின் இலக்குக்கள் கலைத்திட்ட செயற்பாட்டினூடாக அடையப்படும்" இது வினைத்திறனான பாடசாலையொன்றில் எவ்வளவு தூரம் முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகின்றது என்பதை விளக்குக.

(12 புள்ளிகள்)

ii. "கலைத்திட்டமானது பாடசாலையின் இலக்குக்களை அடைவதனூடாக தேசிய இலக்கைத் தழுவி அக்கருத்தியலோடு இசைந்து செல்லும் கொள்கை வகுப்பாளர்களால் திட்டமிடப்பட்டு நடைமுறை ஒழுங்கமைப்பைப் பெறுகின்றது" இக்கூற்று எந்தளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை விளக்குக.

(13 புள்ளிகள்)

3.

i. கலைத்திட்டம் என்பது ஒரு ஆவணப்படுத்தப்பட்ட கோவை அல்ல அது ஒரு இயங்குகின்ற செயற்பாடாகும். இதன்படி கலைத்திட்டமொன்றைத் தயாரிக்கும் போது கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கியமான ஆறு (06) அம்சங்களை விளக்குக.

(6 x 2 = 12 புள்ளிகள்)

ii. கலைத்திட்டத்தைத் தயாரிக்கும் போது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் ஐந்தினை (05) விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. ரெயிலரின் கலைத்திட்ட மாதிரியில் காணப்படும் (Taylor's curriculum model) படிநிலைகளை விளக்கி இம்மாதிரியின் இரு குறைபாடுகளை முன்வைக்குக.
(05 புள்ளிகள்)

4.

i. "கலைத்திட்ட அமுலாக்கலில் பல்வேறு மட்டங்களில் உள்ளோர் ஒரே இலக்கின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் கலைத்திட்டம் அமுலாக்கப்படும்". மாகாண மட்டத்திலிருந்து எவ்வாறு பாடசாலையில் கலைத்திட்டம் அமுலாக்கப்படுகின்றதென்பதை விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. கலைத்திட்ட அமுலாக்கலில் ஆசிரியர் மாணவர் தொடர்பான பிரச்சினைகள் ஒவ்வொன்றுக்கும் உதாரணங்கள் ஐந்தினை (05) முன்வைக்குக.
(5 x 2 = 10 புள்ளிகள்)

iii. "பாடசாலையின் கலைத்திட்ட முகாமையைச் செயற்படுத்த ஓர் அதிபர் அறிவுறுத்தும் தலைமைத்துவப் பண்புகளைத் தன்னிடம் வளர்த்துக் கொள்ள வேண்டும்". இவ்வாறு வளர்த்துக்குக் கொள்ளப்பட வேண்டிய ஐந்து (05) பண்புகளை விளக்குக.
(05 புள்ளிகள்)

5.

i. "உலக நாடுகளின் பாடசாலைகளின் கலைத்திட்டங்கள் தேவைக்கு ஏற்ப மாற்றப்படுகின்றன" அவற்றுக்கான காரணங்களை விளக்குக.
(05 புள்ளிகள்)

ii. இலங்கையில் 2007 ஏற்படுத்தப்பட்ட கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் செய்யப்பட்ட பிரதான மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

iii. இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டு காலகட்டத்தில் ஒரு கலைத்திட்டத்தினைத் தயாரிக்கும் போது உலகப் போக்கு, பொருளாதார நிலைமை என்பவற்றின் அடிப்படையில் எத்தகைய விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் எனக் கருதுகின்றீர். உதாரணங்கள் மூலம் விளக்குக.
(12 புள்ளிகள்)

6. பின்வருவன பற்றிய உமது விளக்கத்தைத் தருக.

i. றிப்பு (1994) என்பவர் கூறிய கலைத்திட்டப் பண்புகள்
ii. முறைசாராக் கலைத்திட்ம்
iii. ஒன்றிணைந்த கலைத்திட்டம்
iv. கலைத்திட்ட அமைப்பானது வினைத்திறனான முறையில் செயற்பட அடிப்படையாக அமையும் நான்கு மூலாதாரங்கள்
v. டெனிஸ் லோட்டனின் கலைத்திட்ட மாதிரி

(5x5= 25 புள்ளிகள்)